தப்பாட்டம்

"வாடிப்பட்டி கொட்டு" என உள்ளூரில் செல்லமாக அழைக்கப்படும், இவ்வகை ஆட்டம். மதுரை, திண்டுக்கல், பெரியகுளம்

மற்றும் தேனி மாவட்டங்களில் மிகவும் பிரபலமானதாக திகழ்கிறது.

மன்னர் திருமலை நாயக்கரின் அவையிலே எல்லா கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். அப்போதைய ஆந்திரபிரதேச மாநிலம், தற்போதைய மஹாராஷ்டிர மாநிலம் வாடி என்ற ஊரில் இருந்து ஒரு ஆட்ட வித்தைகாரர் அவரது கூட்டத்துடன் தனது

கேளிக்கை விநோதங்களை செய்து காண்பித்தார். மாளிகையில் சுவற்றில் தாவி ஏறுவது மற்றும் கயிற்றில் ஏறி நடப்பது போன்ற சாகசங்களை புலியினை போல் வேடமிட்டு நடத்தி காண்பித்ததில் மன்னர் மிகவும் மகிழ்ந்து போனார்.

தப்பு அல்லது தப்பட்டை என கூறப்படும் இசைக்கருவியினை உபயோகித்தபடி தாளம் தப்பாமல் ஆடப்பட்ட அந்த தப்பாட்டத்தால் மிகவும் கவரப்பட்டு போன அரசர் திருமலை நாயக்கர், அந்த கலைஞர்களுக்கு ஒரு குதிரையை வழங்கி சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை முடிய, இஷ்டப்பட்ட இடங்களுக்கு குதிரையிலே

பயணித்து வரும்படி பணித்தார். மீண்டும் அரண்மனைக்கு திருப்பி வந்து அக்கலைஞர் ஏழு கிராமங்களுக்கு பயணம் செய்ததாக சொல்ல அரசர் அவ்வேழு கிராமங்களிலும் 1 காணி நிலத்தை வாடியின் கலைஞனுக்கு அங்கு அவன் குழு மக்கள் தங்கி கலைவளர்க்கும் பொருட்டு வழங்கினார். வாடியில் இருந்து வந்த கலைஞர்கள் தங்க முடிவு செய்த கிராமத்திற்கு வாடிப்பட்டி என பெயரிட்டு அங்கிருந்தபடியே அவர்கள் தப்பாட்டத்தினை முறைப்படி கற்று

வந்தனர். இந்த ஆட்டத்தை மன்னனிடம் மேலும் மெருகூட்டி காண்பித்து மகிழ்விக்க புது யுக்தியினை தேடிவந்த நிலையில் பறை இசை கருவியை கண்டனர். முற்காலத்தில் இருந்தே தமிழகத்தில் வளர்ந்து வந்த பறை என்று இசை கருவி வாசிப்பவர்கள் இருந்து வந்த பரவை, இவர்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் அமைந்திருந்தது. இவ்விடத்தில் அரச முரசுகளும் மற்றதோல் கருவிகள் உருவாக்கப் பட்டது. இன்று இவ்விடத்தருகில் தோல் சந்தை அமைந்துள்ளது.

இங்கு பறைவாசிக்கும் கலைஞர்களுடனும் மற்றமிடர் கருவிகள் வாசிக்கும் கலைஞர்களுடனும் சேர்ந்து ஒரு குழுமமாய் மிடர் இசை ஆட்டத்தை உருவாக்கி வாடிப்பட்டி கொட்டு என்று துவங்கினர் என்று வாய்வழி வரலாறு கூறுவர். இவ்விடத்தில் வரும் கலைஞர்களுடன் தோற்றம், மற்றும் ஆட்டமானது மரபு கலையாக இல்லாமல் கேளிக்கை கலையாக மட்டும் இருந்தது. அன்று கீழ்ஜாதி மக்களால் வாசிக்கப்பட்டு வந்ததாலும் அரசருக்கு விருப்பமான கேளிக்கை இசை "இந்த வாடிப்பட்டி கொட்டு" என்பதால் இந்த இசை மிகவும் பிரபலம்

ஆனது. மன்னரின் பாளையக்காரர்கள் எல்லோரும் அவர்கள் ஊர்களில் தப்பட்ட நிகழ்ச்சிகளையும் சிலர் மன்னர் போலவே வாடிப்பட்டியையும் உருவாக்கினர். இந்த காலகட்டத்தில் இந்த ஆட்டத்தை போலவே ஆட்டக்காரர்களும் தளர்ந்து விட்டனர். இன்று இறுதி ஊர்வலத்தை விடுத்து கிராமிய கலை நிகழ்ச்சிகளில் முதன்மையை பெற்றுள்ளது. இந்த ஆட்டக்காரர்கள் வேஷ்டியை "வரிந்து கட்டி" (தார்ப்பாச்சி பை போல குட்டையாக) கட்டி இடுப்பில் பட்டை கட்டி மிகவும் மென்மையான மேல் சட்டையை அணிந்து இருப்பர். முன்பெல்லாம் பல்டி அடித்து சாகசம் செய்வதற்கு தலையில் இறுக்கமான தலைப்பாகைகளை கட்டி இருந்தனர். தற்பொழுது பெண்கள் ஆடும்பொழுது தலைப்பாகைக்கு பதிலாக ஒரு ரிப்பனை கட்டி கொள்கின்றனர். மேலும் 1940களில் ஆங்கிலேயர்களின் "பேண்டு" வாத்தியத்திற்கு அணிவதைபோல் இவர்கள் கால்சட்டையும் மினுமினுப்பான சட்டைகளையும் முழக்கை சட்டைகளையும் அணிந்து வந்தனர். தற்பொழுது நீண்ட தார்ப்பாச்சி வேஷ்டியை அணிந்து சில இடங்களில் தப்பாட்டம் ஆடப்படுவதை காண்கின்றோம். காண்கின்ற மனிதர்களை அதிர்வுகளால் அசர வைக்கும் தனது பாங்கில் மனிதர்களின் மனம் கவர்ந்த தப்பாட்டம் தற்போது கிராமிய நடனவகையில் ஒரு நீங்காத இடத்தை தனது பாணியினால் பிடித்துக் கொண்டது என்றால் மிகையாகாது.

மிடர் (தோல்) இசை கருவிகளுள் எளிதாக வாசிக்க கூடிய தாரை, பறை போன்ற மற்ற கருவியைவிட "தப்பு" சிறிதளவு சிறியதாகவும் அடிக்கப்படும் குச்சிகள் மெல்லியதாகவும் இருந்தது. முதல் இரண்டு வகையான மிடர் கருவிகளும் அடிக்கப்பட்டு ஒரு புதிய இசைமுறையை உருவாக்கினர். ஏனென்றால் பறை இசைக்கருவி தாளவிதிமுறைகளை சரியாக ஒரே இலக்குக்குள் வைத்திருந்தனர். வாடிப்பட்டி கொட்டில் பலவித தாளங்களையும் அதற்கு ஏற்றார் போல் ஆட்டங்களையும் கொண்டு ஆடிய பிறகு அது வேறு முறையான

இசையை உருவாக்கியது. முன்பெல்லாம் முரசு, சேகண்டி, செரி, துமுக்கு மற்றும் உருமியை கொண்டு இவர்கள் நிகழ்ச்சியை நடத்தினர். தப்பாட்டக்காரர்களின் இசை வெறும் இசையாக மட்டும் இல்லாமல் ஆட்டத்துடன் இருந்ததால் மேற்கூறிய சில இசைக் கருவிகள் ஆட்டத்திற்கு உகந்ததாக இல்லாததாலும் முரசு, துமுக்கு போன்ற இசைகருவிகளின் உபயோகம் உபயோகப்படுத்தப்பட்டன. பொதுவாக இந்த ஆட்டக்காரர்கள் குறைந்தது 5 முதல் 11 உறுப்பினர்கள் கொண்டு இருப்பர், இவர்கள் குறைந்தது 5 வகையான மிடர் இசைக்கருவிகளை கொண்டு, முன்பெல்லாம் வாசித்து வந்துள்ளனர், அப்போது முரசு வாசிப்பவர் மட்டும், தாளமுறை மாற்றி வாசிக்க குறிப்பிடும் வல்லுனராகி இருந்துள்ளது.

பிற்காலத்தில் ஆங்கில ஆட்சியர்களை மகிழ்விக்கும் பொருட்டு "பேண்டு" இசை மிடர் கருவியான "BIGDRUM" முரசுக்கு பதிலாக மாற்றிக் கொண்டனர். இது எளிதாக எடுத்து செல்லக்கூடிய ஒன்றாகவும் சில புதிய நடன சாகசங்கள் செய்ய ஏதுவாக இருந்ததாலும் இன்றுவரை சரியன தப்பாட்டம் வாசிக்கும் குழுவினரால் கையாளப்படுகிறது.

இந்த ஆட்டம் முதன்முதலில் கீழ் இனத்து மக்களால் ஆடப்பட்டாலும் நாயக்க மன்னரால் அவருடைய நிகழ்ச்சிகளில் எல்லாம் இடம் பெற்றதால் அவருடைய பாளையத்துக்காரர்களும் தப்பாட்டத்தை எல்லா நிகழ்ச்சிகளிலும் இடம் பெற செய்வதை ஒரு நாகரீகமாக கருதினர். நாயக்க மன்னரில் ஆட்சிகாலம் மாறிய பொழுது இந்த ஆட்டக்காரர்களின் வாழ்வுமுறையும் மாறிவிட்டது. தப்பாட்டம் "சாவு ஆட்டம் ஆனது" சிலகாலம் இந்த இசை சினிமா வண்டிகள் எனப்படும் சினிமா சுவரொட்டிகள் தாங்கி செல்லும் வண்டிகளுக்கு முன்பும், அரசியல் ஊர்வலங்களின் போதும் சென்றுள்ளது.

ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த தப்பாட்டத்தை தற்போது திண்டுக்கல் மாவட்ட சக்தி குழு என்ற பெண்கள் கிராமிய ஆட்ட கலைஞர்களால் ஆடி பிரபலம் ஆகியதால் கல்லூரி பெண்களிடையே வரவேற்பு பெற்ற அவர்களும் ஆடுவது இந்த நடனத்தின் சிறப்பு. ஒரு காலத்தில் இந்த தப்பாட்ட இசையை கேட்டவுடன் ஒரு சோக நிகழ்வு அல்லது இறுதி ஊர்வலம் செல்கின்றது என்ற எண்ணம் மாறி கிராமிய கலைநிகழ்ச்சி நடக்கின்றது என்று எண்ணும் அளவிற்கு மாறியுள்ளது. மேலும் தப்பாட்டம் மற்ற கிராமிய இசைக்கருவிகளை எல்லாம் பின் தள்ளி முன்னேறி விட்டது.

இன்று தமிழ்நாட்டின் கிராமிய கலை வரலாற்றில் தப்பாட்டம் கிராமிய பாடல்கள் மற்றும் நடனங்களுடனும் சேர்ந்து, தமிழ் மக்களின் இதயத்தை தொடும் மிடர் இசை ஆட்டமாக இடம் பெற்றுவிட்டது. தமிழ் கிராமிய இசையோ அல்லது ஆட்டமோ என்ற கூறியவுடன் தப்பாட்டம் என்று முதலில் கூறும் அளவிற்கு முத்திரையை பதித்துவிட்டது "தப்பாட்டம்" என்று சொன்னால் மிகையாகாது.